# சுன்னாகம் அம்பனைப் பதி உறையும் தெய்வங்கள் மீது யாத்ததும் தொகுத்ததுமான பாடல்கள்



யாத்ததும் தொகுத்ததும்

Dr(திருமதி) பிறேமச்சந்திரா ருஷாந்தி

அனுசரணை

தன்வந்திரி ஆரோக்கிய மந்திர்,
புத்தூர் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்.

# சமர்ப்பணம்

எமையெல்லாம் பிறக்க வைத்து, இன்பதுன்பங்களை

அனுபவிக்கச் செய்து, தன் பாதக்கமலங்களில்

சேர்ப்பிப்பதற்காய், நாளும் பொழுதும்

நல்லதையே நினைத்து நல்லதையே செய்து

நல்லவாறாகவே வாழ வைத்துக் கொண்டிருக்கும்

நாம் வணங்கும் இறைவனதும் இறைவியதும்

பத மலர்களுக்கு இக் கையேடு

# சமர்ப்பணம்

# அம்பனை ஞானவைரவர் தேவஸ்தானம்





அன்பு வடிவானவனே ஞானவைரவா – எங்கள்
அனைத்துக்குறை தீர்த்திடுவாய் ஞானவைரவா

ஆனந்த மூர்த்தியே ஞானவைரவா – எங்கள்
ஆலயத்தில் வந்துறைவாய் ஞானவைரவா

இன்பமய ஜோதியே ஞானவைரவா – என்றும்
இருளகற்ற வந்தவனே ஞானவைரவா

ஈசனருள் பெற்றவனே ஞானவைரவா – எங்கள்
ஈடில்லா நாயகனே ஞானவைரவா

உண்மையன்பர் நெஞ்சினிலே ஞானவைரவா – என்றும்
உணர்வாக நிற்பவனே ஞானவைரவா

ஊமையரைப் பேச வைப்பாய் ஞானவைரவா – எங்கள்
ஊரையெல்லாம் காத்திடுவாய் ஞானவைரவா

எங்கள் குல தெய்வமெல்லோ ஞானவைரவா – என்றும்
எம்முடனே நின்றிடுவாய் ஞான வைரவா

ஏழைகளின் தெய்வமெல்லோ ஞானவைரவா – எங்கள்
ஏழ்மை தனைப் போக்கிடுவாய் ஞானவைரவா

ஐயம் என்று வருவோர்க்கு ஞானவைரவா – எங்கள்
ஐயப்பாடு தீர்த்து வைப்பாய் ஞானவைரவா

ஒளியுருவை நாடி வந்தோம் ஞானவைரவா – எங்கள்
ஒற்றுமைக்கு வழிவகுப்பாய் ஞானவைரவா

அபிஷேகம் அபிஷேகம் ஞானவைரவா – பசும்
பாலாலே அபிஷேகம் ஞானவைரவா

திருநீறாலே அபிஷேகம் ஞானவைரவா – நல்ல
சந்தனத்தால் அபிஷேகம் ஞானவைரவா

குங்குமத்தால் அபிஷேகம் ஞானவைரவா – மலர்
தேனாலே அபிஷேகம் ஞானவைரவா

புளியடியில் வீற்றிருந்த ஞானவைரவா - இந்த
புவனியெல்லாம் காத்திடையா ஞானவைரவா

வேம்படியில் வீற்றிருந்த ஞானவைரவா – எங்கள்
வேண்டுதலைக் கேட்டிடுவாய் ஞானவைரவா

கருநாயும் காவலல்லோ ஞானவைரவா – நீயும்
கருணையுள்ள தெய்வமப்பா ஞானவைரவா

செந்நாயும் காவலல்லோ ஞானவைரவா – நீயும்
சென்ற இடம் சிறக்குமையா ஞானவைரவா

சூலமதைக் கைப்பிடித்தே ஞானவைரவா – நீயும்
சுற்றி நின்று காத்திடுவாய் ஞானவைரவா

சரணம் சரணமையா ஞானவைரவா – உந்தன்
மலரடியே சரணடைந்தேன் ஞானவைரவா

# அம்பலனை ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தானம்







அம்பனையில் வீற்றிருக்கும் காளியம்மா தாயே
அகிலலோக நாயகியே காளியம்மா தாயே

ஆடி வாராய் ஆடி வாராய் காளியம்மா தாயே
ஆனந்தக்கூத்தாடும் காளியம்மா தாயே

இருளகற்றும் ஜோதி நீ காளியம்மா தாயே
இனிய வாழ்வு தந்தருள்வாய் காளியம்மா தாயே

ஈடிணை அற்றவளே காளியம்மா தாயே
ஈகை மனம் உடையவளே காளியம்மா தாயே

உலகத்து நாயகியே காளியம்மா தாயே
உயர்ந்த வாழ்வு தந்தருள்வாய் காளியம்மா தாயே

ஊரெல்லாம் கூடி வந்தோம் காளியம்மா தாயே
ஊர் சுற்றிக் காத்து நிற்பாய் காளியம்மா தாயே

எந்தத்துன்பம் வந்திடினும் காளியம்மா தாயே
எற்றி அதை உதைத்திடுவாய் காளியம்மா தாயே

ஏழைக்கருள் புரிபவளே காளியம்மா தாயே
ஏழுலகம் காப்பவளே காளியம்மா தாயே

ஐயம் என்ற பேர்க்கெல்லாம் காளியம்மா தாயே
ஐயங்களைத் தீர்த்து வைப்பாய் காளியம்மா தாயே

ஒய்யாரமாய் உலவும் காளியம்மா தாயே
ஒற்றுமையாய் வாழ வைப்பாய் காளியம்மா தாயே

ஓடி வந்த அடியவர்க்கு காளியம்மா தாயே
ஓட்டிடுவாய் துன்பமெல்லாம் காளியம்மா தாயே

ஔவை வழி நடப்பவர்க்கு காளியம்மா தாயே
ஔடதமாய் இருப்பவளே காளியம்மா தாயே

பட்டர் பக்தி கண்டவளே காளியம்மா தாயே
பசுமை வாழ்வு தருபவளே காளியம்மா தாயே

பங்குனித்திங்களம்மா காளியம்மா தாயே
படரும் கொம்பவளே காளியம்மா தாயே

மலர்ந்தது ஆடிப்பூரம் காளியம்மா தாயே
மஞ்சள் நீராடிடுவாய் காளியம்மா தாயே

வரலக்ஷ்மி விரதமம்மா காளியம்மா தாயே
வரங்களெல்லாம் எமக்கருள்வாய் காளியம்மா தாயே

நவராத்திரி விரதமம்மா காளியம்மா தாயே
நலமான வாழ்வளிப்பாய் காளியம்மா தாயே

கேதாரகௌரி விரதம் காளியம்மா தாயே
கேட்கும் வரம் தந்திடுவாய் காளியம்மா தாயே

பாடி வந்தோம் பாடி வந்தோம் காளியம்மா தாயே
ஓடி வாராய் ஓடி வாராய் காளியம்மா தாயே

# அம்பனை நாககன்னி தேவஸ்தானம்







அம்மா அம்மா நாககன்னி
அருள்வாய் அம்மா நாககன்னி

ஆள்பவளே நாககன்னி – எம்
ஆதாரமே அம்மா நாககன்னி

இனியவளே அம்மா நாககன்னி
இன்ப மானவளும் அம்மா நாககன்னி

ஈகையாளே அம்மா நாககன்னி
ஈசன் கண்டத்திலும் அம்மா நாககன்னி

உண்மையவளே நாககன்னி – எம்
உணர்வானவள் அம்மா நாககன்னி

ஊரவளே நாககன்னி
ஊட்டம் தருபவளும் அம்மா நாககன்னி

என்னவளே நாககன்னி
எளிமை ஆனவளே அம்மா நாககன்னி

ஏற்றவளே நாககன்னி
ஏற்றம் தருபவளே அம்மா நாககன்னி

ஐந்துடையாள் நாககன்னி
ஐயம் போக்கிடுவாள் அம்மா நாககன்னி

ஒன்றானவள் நாககன்னி – மனதை
ஒன்றாக்குவாள் அம்மா நாககன்னி

ஓதத் தகுபவள் நாககன்னி – மன
ஓட்டமெல்லாமே அம்மா நாககன்னி

ஔடதமே நாககன்னி
ஔடத மானவளும் நாககன்னி

கண்டோமம்மா நாககன்னி
கண் காணும் தெய்வம் அம்மா நாககன்னி

அம்மா அம்மா நாககன்னி
அருள்வாய் அம்மா நாககன்னி

# நன்றிகள்

எனை ஆளும் தெய்வங்களுக்கும்

எனை ஈன்ற தந்தை தாய்க்கும்,

எனக்கு அகரம் சொல்லித் தந்து

என்றும் நான் உயரப் பாகுபடும் என்

தாய்மாமனுக்கும், என் உயர்விலும் தாழ்விலும்

என் கைபிடித்தே நடைபயிலும் என்

வாழ்க்கைத்துணைக்கும்

என் உணர்வுகளின் ஆதரமாம் உடன்பிறப்பிற்கும்

எனை உயர்த்திய

என் ஆசிரியப் பெருந்தகைகளுக்கும்,

என்றும் எனக்கு ஆதரவு நல்கிவரும்

என் உறவுகளுக்கும் என் கிராமமக்களுக்கும்

நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

Dr. திருமதி பி.ருஷாந்தி

"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"

மகிந்தன் கணனி அச்சகம் - சுன்னாகம் 077 666 4210